# Meta-Talk in Purananooru

**T K Ramesh[1], Dr. P. Thamizharisi[2]**

[1]Ph. D., Research Scholar,Department of Tamil, Karpagam Academy of Higher Education, Coimbatore - 641021
[2]Sr. Professor, Department of Tamil, Karpagam Academy of Higher Education, Coimbatore - 641021

**Abstract**
Psychology, more specifically, behavioural psychology, as a formal branch of science took shape in the early 18th century. Great thinkers like Rene′ Descartes (1596-1650), John Locke (1632-1704), George Berkeley (1685-1753), Thomas Hobbes (1588 – 1679), Sir Thomas Brown (1605-1682), Edward Titchener (1867-1932), Pavlov, Sigmund Freud, Carl Gustav Jung, Erik Erickson and Dr. Eric Berne, brought original understanding to Human Behaviours through theories and experientations. However, the various concepts that were presented by these great thinkers, were part of our daily life and culture from the Sangam Age, bounded by virtues and values practiced and postulated through our ancient literary works.
"Meta – Talk: How To Uncover The Hidden Meanings In What People Say" a book written by Gerard I. Nierenberg and Henry H. Calereo (1973,1981), publised in 1996, details and deals with Layered Conversations. Layered conversations are those with implicit messages, non-verbal cues and having more than one intention in communications. The quality of the inner layer(s) of converstions is defined by the strength and maturity of the inner self of the individual. The intended outcome of the inner layer of conversations are often missed or difficult to decipher, if the receiver of the communication is not actively listening. During such conversations, the tone, tenor, facial expressions, gestures, pace of delivery and body language tend to differ from the words that are spoken. This contrast or contradiction of the words and the other parts of communication indicates the layered conversation.
This article attempts to explore the **Meta-Talk** in our ancient text **Purananooru** and present the same.

**Key Words:** Cliches, Platitudes, Truisms, Listening Post, Softeners, Foreboders, Continuers, Downers, Rhetorics

## புறநானூற்றில் உள்ளுரை உரையாடல்கள் (Meta-Talk)

டி கே இரமேஷ்
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை,
கற்பகம் உயர்கல்விக்கழகம்
கோயம்புத்தூர் - 641021

முனைவர் ப தமிழரசி
மூத்த பேராசிரியர்
தமிழ்த்துறை
கற்பகம் உயர்கல்விக்கழகம்
கோயம்புத்தூர் - 641021

முன்னுரை:

ஒரு மனிதனின் ஆழமான மனதினை புரிந்து கொள்ள அம்மனிதனிடமிருந்து வெளிப்படும் வார்த்தைகளும், முக பாவங்களும், அவன் அறியாமல் செய்யும் சைகைகளுமே திறவுகோல்களாக அமைகிறது. இம் மூன்றும் வெவ்வேறு உலகங்களை ஒவ்வொருவர் மனதிலும் சிருஷ்டிக்கும் வலிமை பொருந்தியது! “வார்த்தைகள் நமது “உள்ளேயும் – வெளியேயும்” உலகங்களை சிருஷ்டிக்கும் வலிமை பொருந்தியது” என்பது உளவியலில் ஒரு ஒப்புக்கொள்ளப்பட்ட கோட்பாடாகும்!

இதனைத்தான் நமது சங்க இலக்கியங்கள் உள்ளுரை என்ற பொருளில் முன்வைத்தன. அதாவது உள்ளுறுத்து உரைப்பது அதாவது உள்ளே ஒன்றினை குறிப்பாக வைத்து வெளியே மற்றொன்றை உரைப்பது. இதுஅகத்திணையில் அதிகம் பயன்படுத்தப்படும். அகப்பாடல்கள் அதிலும் குறிப்பாக தலைவன் தலைவி குறித்த செய்திகள் இடம் பெறும் பாடல்கள் பலவற்றில் இந்த உவமம் முன்னிறுத்தப்பட்டு பாடல்கள் எழுதப்பட்டுள்ளன.

**உள்ளுரை உரையாடல் (மெட்டா-டாக்) என்பதன் புரிதல்:**

மனித உறவு சிக்கல்களில் மிகவும் கடினமான ஒரு விஷயமானது “தவறாக புரிந்து கொள்ளுதல்” என்பதே ஆகும். பல உறவுகள் “ சரியாக புரிந்து கொள்ளாததினால்” முறிந்திருக்கிறது! ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வில் பலமுறை “நம்மைச் சரியாக புரிந்து கொள்வார்களா? அல்லது தவறாக புரிந்து கொண்டு உள்ளார்களா?” எனும் மன உளைச்சலால் பாதிக்கப்பட்டு இருக்கலாம். எத்தனையோ முறை நாம் நம் அன்றாட உரையாடல்களில்

- “நீ என்ன சொன்னாய்?”
- “நீ எதையோ மனதில் வைத்துக்கொண்டு பேசுகிறாய்!”
- “உன் பேச்சும் முகமும் வேறு வேறாக இருக்கிறதே!”

என்பன போன்ற வாக்கியங்களைப் பயன்படுத்துகிறோம்.

கோபம், அதிர்ச்சி, கருணை, அன்பு, வாஞ்சை, அழுகை, மகிழ்ச்சி போன்ற உணர்வுகளை தன்னிச்சையாக வெளிப்படுத்தும்போது அவை எல்லோருக்கும் எளிதாகப் புரியும்படி அமைகிறது. அதே சமயம், மற்றவர்களிடம் தயக்கத்துடன் வெளிப்படுத்தும் உணர்வுகள் பெரும்பாலும் உள்ளுரையாகவே அமைகிறது. மற்றவரிகளிடம் ஏற்படும் பயம், இயலாமை, தவிப்பு, பரிதவிப்பு, அருவருப்பு, கழிவிரக்கம், தனிமை, ஏக்கம், கேலி, கிண்டல் போன்ற உணர்வுகளை வெளிப்படுத்தும்போது அவை உள்ளுரை உரையாடல்களாகவே அமைவதை காணலாம்.

எனக்கு நினைவிருக்கிறது - என் தந்தைக்கு அவரது இருபத்தி ஐந்து வருட சேவைக்காக அவரது தொழிற்சாலையில் ஒரு கைக்கடிகாரம் பரிசளித்தார்கள். தன்னுடைய அந்த கைக்கடிகாரத்தை அவர் எனக்கு பத்தாம் வகுப்பு இறுதி பரீட்சைக்கு உதவியாக இருக்கும் என்று அளித்தார். எனக்கு ஒரே பெருமை கை

கடிகாரம் அணிந்து தேர்வுக்கு செல்கிறேன். தேர்வு எழுதுகிறேனோ இல்லையோ கடிகாரத்தை பலமுறை பார்த்துக் கொண்டேன். தேர்வின் கடைசி நாள் தேர்வு முடிந்து நான் வீடு திரும்பும் போது, என்னை அறியாமல் என் கையில் இருந்த கடிகாரம் எங்கேயோ நழுவி விழுந்து விட்டது வீட்டிற்கு வந்தவுடன்தான் நான் அதை உணர்ந்தேன். தந்தையிடம் எப்படி சொல்வது? கோபப்படுவாரா? அடிப்பாரா? என்ன செய்வார்? என்ற மனக் கவலையோடு இருந்தேன்!
என் தாய், "நீ ஆயிற்று உன் தந்தையாயிற்று" என்று ஒரே வரியில் விலகிக் கொண்டார்! தந்தை வந்தவுடன் அவரிடம் மெதுவாக சென்று "அப்பா நான் ஒன்று சொல்வேன் நீங்கள் கோபிக்க கூடாது" என்றேன். அவர் சிரித்துக் கொண்டே "நீ சொல்லும் போதே தெரிகிறது, நான் கோபப்படும் விஷயத்தையே நீ கூறப்போகிறாய்" என்றார். நான் பயந்தபடியே மெதுவாக அவரிடம் கைகடிகாரம் தொலைந்த விஷயத்தை கூறினேன். ஒரு நிமிடம் மௌனம்! பின்னர் "ஹூம்!" என்ற பெருமூச்சுடன் ஏதும் சொல்லாமல் வெளியில் சென்று விட்டார்!

**அவர் சிரித்தபடியே கேட்டதினால் உடனடியாக கோபம் வருவது தவிர்த்தது என்று ஒரு நிமிடம் நினைத்தேன்! அப்போது அது Meta-Talk என்று தெரியவில்லை!**

இதுபோல் நாம் அனைவரும் ஒருவரிடம் ஒரு சங்கடமான விஷயத்தை பகிர்வதற்கு முன்பு "நீங்கள் அதிர்ச்சியடைய கூடாது, கோபப்படக்கூடாது, சஞ்சலப்படக்கூடாது" என்று அவரை நல்லது அல்லாத விஷயத்திற்கு தயார் செய்வது போல் பேசி இருப்போம்.
நமக்குள்ளே நடக்கும் மனப் போராட்டத்தினை நாம் சில சமயங்களில் இவ்வாறு சமாளிக்கிறோம்! இதனை மெட்டா டாக் (Meta-Talk) என்பார்கள். இதுபோல புறநானூற்று காலங்களிலும் நிகழ்ந்திருப்பதை நாம் காணலாம். அது போல் புறநானூற்றில் காணலாகும் சில பாடல்களை பின்வரும் கட்டுரையில் காணலாம்.

**புறநானூற்றில் உள்ளுரை உரையாடல்கள் (மெட்டா டாக்):**

புறநானூற்று பாடல் எண் ஐந்து(#5):
மன்னர் ஒருவருக்கு புலவர் செவியறிவுறுத்தும் பாடல்.

**பாடியவர் :-** நரிவெரூஉத் தலையார்
**பாடப்பட்டவர்:-** சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை
**திணை:-** பாடாண்:
**துறை:-** செவியறிவுறூஉ, பொருண்மொழிக்காஞ்சி

மன்னன் அறநிலையிலிருந்து அல்லார் சேர்க்கையினால் நாட்டை நிர்வகிக்கும் தன் கடமையிலிருந்து பிறழக்கூடும் என்று உணர்ந்து ஒரு புலவன்,

- தன் நிலை- தன் வரையறை அறிந்து,
- தான் சொல்லப் போவது அந்த வரையறையில் இருந்து விலகி நிற்க வேண்டிய நிலை வரும் என உணர்ந்து,
- மன்னன் கோபிக்கக்கூடும் என்று எதிர்பார்த்து,
- ஆனால் சொல்லாமல் இருப்பது கடமையிலிருந்து தவறியது போல் ஆகும் என்பதையும் உணர்ந்து,

மன்னன் மனம் கோணாதவாறு எடுத்து சொல்வதாக அமைகிறது இந்தப் புறநானூற்றுப் பாடல்.

**பாடலின் முதல் வரிகள்:**

“எருமை அன்ன கருங் கல் இடைதோறு
ஆனின் பரக்கும் யானைய, முன் பின்…
…”

**பாடலின் சுருக்கமான விளக்கம்:**

எருமைகள் போன்ற கருங்கற்கள் விளங்கும். அதனிடை பசுக்கள் போல் யானைகள் உலவும்; அத்தகைய காட்டிற்கு சொந்தமானவனே! நீ பெரியவன்! உனக்கு ஒன்று சொல்வேன்! (தப்பாக நினைக்காதே) அருளும் அன்பும் இல்லாதவர் நரகத்திற்கு செல்வர். அத்தகையவரோடு சேராமல், குழந்தையைக் காப்பாற்றும் தாயைப் போல நாட்டை காப்பாற்று அரச பதவி கிடைப்பது அத்தனை எளிதல்ல!

**உளவியல் சார்ந்த மெட்டா-டாக் என்பதனை குறிக்கும் பதங்களும் அதன் நோக்கமும்:**

புலவர் மன்னன் கோபித்துக் கொள்வானோ எனத் தான் சொல்ல நினைத்ததை சொல்லலாமா வேண்டாமா என்னும் மனப்போராட்டத்தில் முதலில் மன்னனுக்கு மனம் சந்தோஷம் கொள்ளுமாறு அவனைப் பற்றிய நல்ல விஷயங்களை கூறி அவனை பெரியவன் என்றும் அழைக்கிறார்! அதனைச் சார்ந்த வரிகள்:

“எருமை அன்ன கருங் கல் இடைதோறு
ஆனின் பரக்கும் யானைய, முன் பின்,
கானக நாடனை! நீயோ பெரும!

மன்னன் மனம் கோபிக்காத கேட்கும் நிலையை அடைந்தது என்று உறுதி செய்து கொண்ட பின்னும், “ நீ கோபிக்காவிடில் நான் ஒன்று சொல்வேன்”, என்று மீண்டும் மன்னனுக்கு கோபிக்க கூடாது என்பதை நினைவூட்டுகிறார்.

"நீ ஓர் அகலின், நின் ஒன்று மொழிவல்;"

மன்னன் கோபிப்பதற்கு முன் இவ்வரிகளை கேட்டுச் சிறிது சிந்தித்து கேட்பான் என்று மனதில் தைரியம் வந்த பின்பு அடுத்த வரிகளை கூறுகிறார்.

அருளும் அன்பும் நீக்கி, நீங்கா
நிரயம் கொள்பவரோடு ஒன்றாது, காவல்,
குழவி கொள்பவரின், ஓம்புமதி!

மேற்கண்ட அறிவுரை கூறிய பின்பு, மன்னனுக்கு இதனால் என்ன பயன், இவ்வாறு செய்யவில்லை என்றால் எதை இழக்க நேரிடும் என்பதையும் எடுத்துரைக்கிறார்.

"..அளிதோ தானே; அது பெறல் அருங்குரைத்தே."

**புறநானூற்று பாடல் நாற்பத்து எட்டு(#48)**

**பாடியவர் :-** பொய்கையார்

**பாடப்பட்டவர்:-** சேரமான் கோக்கோதை மார்பன்

**திணை:-** பாடாண்:

**துறை:-** புலவராற்றுப்படை

மன்னனிடம் பரிசில் கேட்கச் செல்லும் புலவரிடம் மற்றொரு புலவர் தன்நிலையையும் எடுத்துச் சொல்லுமாறு அமைவது புலவராற்றுப்படையாகும். இப்பாடலில்,

- சேர மன்னன் அணிந்துள்ள நெய்தல் மாலையின் பெருமையைக் கூறி,
- அவன் ஊரின் தன்மைக் கூறி, அவ்வூரே தன் ஊர், என்று தனக்கும் மன்னனுக்கும் உள்ள தொடர்பைக் எடுத்துரைத்து,
- அவனின் புகழ் பாடப்பட்ட போது தான் அங்கு இருந்ததும் நினைவுருத்தி,

தன்னை மறக்காமல் இருக்குமாறு வேண்டுகிறார்.

**பாடலின் முதல் வரிகள்:**

"கோதை மார்பின் கோதையானும், தையைப் புணர்ந்தோர் கோதையானும்..."

**பாடலின் சுருக்கமான விளக்கம்:**

"சேரமான் கோக்கோதை அணிந்துள்ள மாலையாலும், அவனை மணந்த பெண்கள் அணிந்த மாலையாலும், பெரிய உப்பங்கழியில் மலரும் நெய்தல் மலராலும், மணக்கும் அவன் ஊராம் தொண்டி! அந்த ஊரே என் ஊர்! அவனே எங்கள் தலைவன். இரவலனே! அம்மன்னனிடம், இவை கூறி, அம்மன்னன் போரில் சிறப்புற்று, புகழப்பட்ட போது, நான் அங்கு இருந்தேன், என்பதையும் கூறி, என்னைப்பற்றி நினைவூட்டுவாயாக!"

**உளவியல் சார்ந்த உள்ளுரை உரையாடல் (மெட்டா டாக்):**

புலவர் மன்னனின் அந்தரங்கமும், அவனது ஊரின் சிறப்பும் கூறி, தனது ஊரும்

அதே, தன் தலைவனும் அவனே என்பதன் மூலம், அவனோடிருக்கும் தனது நெருக்கத்தையும், அவன்மேல் உள்ள பக்தியையும் எடுத்துரைக்கின்றார்.

அவனின் பெருமையும், பெருமகிழ்ச்சி தந்த நிகழ்வையும் கூறி, தான் அவனின் வாழ்வில் பிணைந்திருப்பதை சுட்டிக்காட்டுகிறார். அத்தகைய தன்னை அம்மன்னனுக்கு நினைவுப்படுத்த கூறுவதன் மூலம், அவன் தன்னை மறந்துவிட்டான் என்று மறைமுமமாக கூறுகிறார். அவ்வாறு மறக்காமல் இருந்திருந்தால், தான் இவ்வாறு பொருள் வேண்டி நிற்கும் நிலை வந்திருக்காது என்பதையும் உரைப்பொருளாக அமைக்கிறார் புலவர். இரவலர் வாயிலாக இம்மறை பொருளைச்சொல்லி, உதவி கோருவதாக கருப்பொருள் அமைகிறது.

அதனைச் சார்ந்த வரிகள்:

"...அவர் மேம்படூஉம் காலை, நின்
புகழ் மேம்படுதலை கண்டனம்' எனவே."

**புறநானூற்றுப் பாடல் எண் நூற்றுப்பதினேழு(#117)**

**பாடியவர்:** கபிலர்

**திணை:** பொதுவியல்

**துறை:** கையறுநிலை

மனதில் ஏற்படும் அவல உணர்வினை எடுத்துரைப்பது கையறுநிலை ஆகும். இப்பாடலின் மூலம் புலவர் கபிலர், வள்ளல் பாரி ஆண்ட பறம்பு மலை, அவன் இறந்தபின் சீர் அழிந்து நிற்கும் நிலை, அவர் மனதில் அவல உணர்வை எற்படுத்தியது.

கபிலர்,

- அவலத்தை உள்ளுரைப் பொருளாக வைத்து,
- பகையும் போரும் ஒரு நாட்டையும் அதன் வளத்தையும் அழிக்கும் தன்மையைக் கருப்பொருளாகக் கொண்டு,
- பறம்பு மலைநாட்டின் சீர் மிகுந்த கடந்தகால நிலையினை எதிர்மறைப் பொருளாக சித்தரிக்கிறார்.

**பாடலின் முதல் வரிகள்:**

"மைம்மீன் பகையினும், தூமம் தோன்றினும்.
தென் திசை மருங்கின் வெள்ளி ஓடினும்..."

**பாடலின் சுருக்கமான விளக்கம்:**

சனி புகைந்தாலும், வால் நட்சத்திரம் தோன்றினாலும், தென் திசையில் சுக்கிரன் சென்றாலும், வயல்கள் நிறைந்திருக்கும், புதர்களில் பூக்கள் குவிந்திருக்கும். அமைதியான கண்களையுடைய கன்றை ஈன்ற பசுக்கள் நல்ல

செழுமையான புல்லைத்திண்ணும், செழுமையான நியாயமான ஆட்சி நிலவிய நாட்டில், ஆன்றோர் பெருகினர், மழை பொய்க்காமல் பெய்தது!
இத்தகையவாக இருந்த இந்த நாடுதான், அழகிய வளையல் அணிந்த, இளம் காட்டுப்பூனையின் கூறிய பற்கள் போன்றும், முல்லை மலரின் வெண்மையுடன் கூடிய பற்களை கொண்ட, இப்பெண்களின் தந்தை வள்ளல் பாரி ஆண்ட பறம்பு நாடு!

**உளவியல் சார்ந்த உள்ளுரை உரையாடல் (மெட்டா டாக்):**
வானியல் நிலையினாலும், ஜோதிட சாஸ்திர நிலையினாலும் கேடு விளைவிக்கும் சூழ்நிலையிலும், பறம்பு நாடு கேடின்றி சிறந்து விளங்கியது. இப்போது வானியல்/ஜோதிட நிலைகள் நன்றாக இருப்பினும் நாடு அழிந்துபட்டு இருக்கிறது. ஆன்றோர்கள், அமைதியான பசுக்கள், இயற்கை வளங்கள் போன்ற அனைத்தையும் பேணி பாதுகாத்த பாரியின் அழகிய பெண்கள், இப்போது ஆதரவின்றி இருக்கிறார்கள். இதற்குக் காரணமான பகையையும் போரையும் தன்னால் தடுக்க இயலவில்லை. இப்போது பாரியின் பெண்களுக்கு நல்ல நிலையையும் ஏற்படுத்திக் கொடுக்க இயலவில்லை. இந்த நிலையினை கையறுநிலையாக அனுபவிக்கும் கபிலர், நல்லவை கூறி அல்லவை உள்ளுரையாக உணர்த்துகிறார்.

**புறநானூற்றுப் பாடல் எண் நூற்றெழுபத்தொன்பது(#179)**
**பாடியவர்:** வடநெடுந் தத்தனார்
**பாடப்பெற்றவர்**: நாலை கிழவன் நாகன்
**திணை:** வாகை
**துறை:** வல்லான்முல்லை
புலவர் இப்பாடலில், வல்லான்முல்லை என்னும் துறையின் துணைகொண்டு, பாடல்தலைவனின் வீரத்தின் பெருமையை உள்ளுரையாகக் கூறுவதோடு மட்டுமல்லாது, தன்னுடைய இரக்கும் நிலைப்பாட்டையும் உள்ளுரையாக எடுத்துரைக்கிறார்.

**பாடலின் முதல் வரிகள்:**

> "ஞால மீமிசை வள்ளியோர் மாய்ந்தென
> ஏலாது கவிழ்ந்த என் இரவல் மண்டை
> மலர்ப்போர் யார்?"....

**பாடலின் சுருக்கமான விளக்கம்:**
உலகத்தில் வள்ளல்தன்மையோடு கொடுப்பவர்கள் இறந்துவிட்டார்கள், அதனால் என் பிச்சை பாத்திரம் கவிழ்ந்து கிடக்கிறது. அதனை இப்போது நிமிர்த்தி நிறைப்போர் யார்? எனக்கேட்ட போது, பல வெற்றிகளை கொண்ட

பாண்டியனின் படைத்தலைவன் நாலை கிழவன் நாகன் என்றனர். நாகன் வீரரும், வாளும், அமைச்சும் தேவைபடும் போதெல்லாம் கொடுப்பவன். தான் ஏற்றுக்கொண்ட பொறுப்பை நடுநிலையோடும், ஒருபோதும் தளர்ச்சியின்றியும் நிறைவேற்றுபவன். அவன் தன் வீரத்தால் பருந்தின் பசியாற்றுபவன். இவ்வாறு எல்லா நிலைகளிலும் சிறந்து விளங்குபவன் நாகன், என பலராலும் புகழப்படுபவன்.

**உளவியல் சார்ந்த உள்ளுரை உரையாடல் (மெட்டா டாக்):**
கொடைத்தன்மை என்பது, தன்னை நாடிவரும் வறியவரின் காரணம் கருதாமல் தன்னிடம் இருப்பதைக் கொடுத்து உதவுவதாகும். புலவர் தான் பரிசில் பெற நாடும் வள்ளல் (அ) மன்னன் கொடைத்தன்மை கொண்டவனாக இருப்பின் மட்டுமே நாடுவதாகவும், அத்தகைய வள்ளல் இல்லாததால் தன் பிச்சைப்பாத்திரம் குப்புறக்கிடத்தப்பட்டிருபதாக உணர்த்தும் வரிகள் கீழ்கண்டவாறு:

“ஞால மீமிசை வள்ளியோர் மாய்ந்தென
ஏலாது கவிழ்ந்த என் இரவல் மண்டை
மலர்ப்போர் யார்?”....

போரில் பலரை மாய்த்த வெற்றி வீரன், போரில் இறந்துபட்ட உடல்கள் பருந்திற்கு இரையாவது இயற்கையே. இதனை உள்ளுரைப் பொருளாக “பருந்து பசீ தீர்க்கும்...” என்ற வரிகளில் அமைகிறார்.

**புறநானூற்றுப் பாடல் எண் முந்நூற்றுப்பதிணான்கு(#314)**
**பாடியவர்:** ஐயூர் முடவனார்
**திணை:** வாகை
**துறை:** வல்லான்முல்லை
புலவர் இப்பாடலில், வல்லான்முல்லை என்னும் துறையின் துணைகொண்டு, பாடற்தலைவனின் வீரத்தின் பெருமையை கூறும்போது, அவன் ஊரில் அவனின் நிலைப்பாட்டினைக் எடுத்துரைத்து, ஊரின் தன்மையையும் கூறி, எந்த ஒரு தனிச்சிறப்பு இல்லாதிருப்பினும், தன் வீரத்தால் மட்டுமே உயர்ந்து நிற்கும் ஓர் சுயநலன் பாராத வீரனை உள்ளுரையாக போற்றுகிறார்.

**பாடலின் முதல் வரிகள்:**

“மனைக்கு விளக்கு ஆகிய வாணுதல் கணவன்,
முனைக்கு வரம்பு ஆகிய வென் வேல் நெடுந் தகை,...”

**பாடலின் சுருக்கமான விளக்கம்:**
வீட்டிற்கு ஒளிதரும் ஒளிமிகு நெற்றியை உடைய பெண்ணின் கணவன்; போரில்

தன் படைக்கு எல்லையாகி நிற்கும் வீரன் அவன்; அவன் வாழும் ஊரோ நடுகற்கள் உயர்ந்த, தழைகள் உதிர்ந்த படைவீடு; அற்ப நெல்லி விதைகளையுடைய புன்செய் நிலத்தூர்; அச்சிற்றூரில் வாழும் குடிகளில் ஒருவன்; ஆயினும் போர் என்றால் வீரத்துடன் முந்தி நிற்கும் படைக்காவலன் அவனே!

**உளவியல் சார்ந்த உள்ளுரை உரையாடல் (மெட்டா டாக்):**

சிறப்பு இல்லாச்சிற்றூர்; வளம் ஏதும் இல்லா புன்செய் நிலத்தூர்; நடுகற்கள் நிறைந்த படைவீடு செறிந்த ஊர்; ஆனால் ஒரு குலவிளக்காக் விளங்கும் பெண்ணின் கணவன்! தன் போர் சேவைக்காக எந்தவித பெருமையையும், பதவியையும் பட்டங்களையும், எதிர்பாராத வீரன்; தன் குடும்பத்திற்காக எந்தவித வசதியையும் வளத்தையும் கொடுக்க இயலாத ஊரில் இருப்பவன்; தன்னை சுற்றி ஓங்கி நிற்கும் நடுகற்கள் தவிர ஏதும் இல்லாத நிலையிலும், மன்னனுக்கு துன்பம் என்றால் படைக்கு முன்நிற்கும் உயர்தன்மை. ஒரு புறம் வீரம், மறுபுறம் ஏதும் இல்லா நிலையை படைத்து, சுயநலமில்லாத வீரனை உள்ளுரையாகப் படைக்கிறார் புலவர்.

“…முனைக்கு வரம்பு ஆகிய வென் வேல் நெடுந் தகை
நடுகல் பிறங்கிய உவல் இடு பறந்தலை…
புன் காழ் நெல்லி வன் புலச் சிற்றூர்க்
குடியும் மன்னும் தானே…”

மேற்கண்ட வரிகள் சுயநலம் பார்காத வீரனை நம் கண்முன்னே நிறுத்துகிறது

**முடிவுரை:**

"Metatalk" is the process of thinking about thinking, or the intentional awareness and even control of personal thought processes. ஒரு மனிதன் தன்னை அறிந்து, தன்னிலை உணர்ந்து, தான் சொல்லும் கருத்தின் முக்கியத்துவம் புரிந்து, கேட்பவரின் அதிகாரம் சக்தி போன்றவற்றையும் புரிந்து தன் கருத்தை, தன் நோக்கத்தின் தெளிவோடு, நினைத்த இலக்கை அடையும் வகையில் பகிர்வதே மெட்டா-டாக் (Meta-Talk) என்பதாகும்.

இதுபோல் மனித மனத்தின் போராட்டங்களையும் அது திறம்பட தன்னை வெளிப்படுத்தும் தன்மைகளையும் இன்னும் பல புறநானூற்றுப் பாடல்களில் நாம் வரும் கட்டுரைகளில் காணலாம்.